Y-M-C-A

Registered as a News Paper　　பக்கங்கள் 04　　விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　　Peoples Daily　　மக்கள் தினசரி

நாதம் 04　　திருவள்ளுவர் ஆண்டு 2024　　பங்குனி 26　　[08-04-1993]　　வியாழக்கிழமை　　ஓசை 49

## 1300 சிங்கள குடும்பங்களை குடியேற்ற அரசு முயற்சி

வவுனியாவில் பாவற்குளம் பகுதியில் 1300 சிங்கள குடும்பங்கள் மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் குடியேற்றப்படவுள்ளன. இக்குடியேற்றத்திற்கென 4 கோடி ரூபாவை அரசு செலவிட்டுள்ளது. குடியேறும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 15 ஆயிரம் ரூபா அரசினால் வழங்கப்படுகின்றது. அண்மையில் பாவற்குளம் பகுதிக்கு காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தித்துறை அமைச்சர் காமினி அத்துகொரள ஹமில்டன் வனசிங்க வட பகுதி தளபதி மேஜர் ஜெனரல் தளுவத்த, வவுனியா பொறுப்பதிகாரி பிரிகேடியர் களுபஹன ஆகியோர் விஜயம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

# போர் முறைத் திட்டம் வகுப்பதில் இராணுவ தலைமையில் முரண்பாடு

## 10 வருடமாகியும் முடியவில்லையாம்

[கொழும்பு]

பத்துவருடங்கள் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் செய்தபின்னரும் புலிகளுக்கு எதிரான யுத்த தந்திரோபாயம் மற்றும், யுத்த நுட்பம் குறித்து சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் மத்தியில் கடுமையான அபிப்பிராய பேதம் நிலவுவதாகவும், இதனால் சிறிலங்கா இராணுவத்தினால் புலிகளுக்கு எதிரான ஒரு யுத்த தந்திரோபாயத்தை வகுக்க முடியாமல் உள்ளதாகவும், சிங்கள விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ் விடயம் குறித்து 'ஐலண்ட்' வார இதழில் எழுதியுள்ள சமிந்திரா பெர்னான்டோ-

பத்து வருடங்கள்புலிகளுக்கு எதிராக யுத்தம் செய்த பிறகும் புலிகளுக்கு எதிரான யுத்த தந்திரோபாயம் மற்றும் யுத்த நுட்பம் குறித்து சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் மத்தியில் கடுமையான அபிப்பிராய பேதம் நிலவுவதாக இராணுவ அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி தெரிவிக்கின்றார்.

இராணுவத்தில் நிலவும் உட்பூசலுக்கு ஒரு முடிவு இருப்பதாகத் தெரியவில்லை என்று மற்றோர் இராணுவ அதிகாரியை மேற்கோள் காட்டி எழுதும்சமிந்திரா பெர்னான்டோ மேலும், இராணுவத்தினுள் நிலவும் பகை மற்றும் விரோதம் காரணமாகக் கடந்த சில வருடங்களாக நடைபெறும் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் ஒரு முடிவை எட்டக் கூடிய யுத்த தந்திரத்தை இராணுவம் உருவாக்கத் தவறிவிட்டது என்று இராணுவ ஆய்வாளர் கருதுகின்றனர்.

''வடக்கு - கிழக்கில் நடைபெறும் பயங்கர யுத்தத்திற்கு அரசியல் அல்லது இராணுவத் தீர்வொன்றைக் காண அரசியல் மற்றும் இராணுவத் தலைமை தவறிவிட்டது.''

''கடந்த சில மாதங்களாக இராணுவம் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபடவில்லை. கடந்த எட்டு மாதங்களில் வடக்கு, கிழக்கில் புலிகளுக்கு எதிரான பாரிய நடவடிக்கை எதனையும் இராணுவம் மேற்கொள்ளவில்லை என்பதை யுத்த முனையில் உள்ள இராணுவ அதிகாரி ஒருவர் ஒப்புக்கொள்கிறார்.

கிழக்கில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சுற்றிவளைத்து தேடும்நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டதுடன், வன்னிப் பகுதியில் இராணுவம் நகர்த்தப்பட்டதைத் தவிர, நிச்சயிக்கப்பட்ட ஒரு முடிவைத் தரக் கூடிய முப்படைகளின் கூட்டு நடவடிக்கை எதுவும் புலிகளுக்கு எதிராக இடம் பெறவில்லை என்பதை இராணுவ அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொள்கிறார்கள்.—


( 3 ஆம் பக்கம் பார்க்க )

## லலித் போட்டி

[கொழும்பு]

ஐக்கிய தேசிய ஜனநாயக முன்னணியின் தலைவர் லலித் அத்துலத்முதலி மேல் மாகாணசபையின் முதலமைச்சர் பதவிக்கு போட்டியிடுவதாகத்தெரிவிக்கப்படுகின்றது. இதே சமயம் காமினி திஸ்ஸநாயக்கா மத்திய மாகாண சபைக்கும் ஜி. எம். பிரேமச்சந்திர வடமேல்மாகாண சபைக்கும் முதலமைச்சர் பதவிக்கு இக்கட்சியின் சார்பில் போட்டி

( 3 ஆம் பக்கம் பார்க்க )



நேற்று பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறிய தமிழீழ காவல் துறையினரின் மூன்றாம் அணியினரின் அணிவகுப்பு மரியாதையினை தமிழீழ விடுதலைப்புலிகளின் துணைத் தளபதி திரு. பால்ராஜ் ஏற்றுக் கொள்வதனையும் அவருடன் தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் அருகில் நிற்பதனையும் படத்தில் காணலாம்.


## யுத்தத்தை தொடர்வது பற்றி படை அதிகாரிகள் மாநாடு

[கொழும்பு]

## வாதுவவில் வவுச்சர்

(யாழ்ப்பாணம்)

வெகுவிரைவில் யாழ். வர இருக்கும் வாதுவ கப்பலில் எப்பிரல் மாத பென்சன் வவுச்



தியுள்ள சமிந்திரா பெர்னான்டோ-

பத்து வருடங்கள்புலிகளுக்கு எதிராக யுத்தம் செய்த பிறகும் புலிகளுக்கு எதிரான யுத்த தந்திரோபாயம் மற்றும் யுத்த நுட்பம் குறித்து சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் மத்தியில் கடுமையான அபிப்பிராய பேதம் நிலவுவதாக இராணுவ அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி தெரிவிக்கின்றார்.

இராணுவத்தில் நிலவும் உட்கட்சி மற்றோர் இராணுவ அதிகாரியை மேற்கோள் காட்டி எழுதும்சமிந்திரா பெர்னான்டோ மேலும், இராணுவத்தினுள் நிலவும் பகை மற்றும் விரோதம் காரணமாகக் கடந்த சில வருடங்களாக நடைபெறும் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் ஒரு முடிவை எட்டக் கூடிய யுத்த தந்திரத்தை இராணுவம் உருவாக்கத் தவறிவிட்டது என்று இராணுவ ஆய்வாளர் கருதுகின்றனர்.

அரசியல் அல்லது இராணுவத் தீர்வொன்றைக் காண அரசியல் மற்றும் இராணுவத் தலைமை தவறிவிட்டது.''

''கடந்த சில மாதங்களாக இராணுவம் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபடவில்லை. கடந்த எட்டு மாதங்களில் வடக்கு, கிழக்கில் புலிகளுக்கு எதிரான பாரிய நடவடிக்கை எதனையும் இராணுவம் மேற்கொள்ளவில்லை என்பதை யுத்த முனையில் கிழக்கில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சுற்றிவளைத்து தேடும்நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டதுடன், வன்னிப் பகுதியில் இராணுவம் நகர்த்தப்பட்டதைத் தவிர, நிச்சயிக்கப்பட்ட ஒரு முடிவைத் தரக் கூடிய முப்படைகளின் கூட்டு நடவடிக்கை எதுவும் புலிகளுக்கு எதிராக இடம் பெறவில்லை என்பதை இராணுவ அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொள்கிறார்கள்.—

( 3 ஆம் பக்கம் பார்க்க )

# யுத்தத்தை தொடர்வதுபற்றி படை அதிகாரிகள் மாநாடு

[கொழும்பு]

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இராணுவ நடவடிக்கையை அதிகரிப்பதென சிறிலங்கா பாதுகாப்பு அதிகாரிகள் உயர்மட்ட மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சண்டே ரைம்ஸ் தெரிவிக்கிறது.

இது குறித்து கடந்த வியாழனன்று பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற உயர் மட்ட மாநாட்டில் இவ்விடயம் குறித்து ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. மேலும் படை நடவடிக்கையின் போது படையினரால் மனித உரிமை மீறல் சம்பவங்கள்இடம்பெறாமல் இருக்க பார்த்துக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. இந்த உயர்மட்ட மாநாட்டில் ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன், சட்டமா அதிபர் திலக் மாரப்பன, பதவி விலகி செல்லும் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் சிறில்ரணதுங்க, புதிய பாதுகாப்பு அமைச்சின் செயலர் எயர்மார்ஷல் வோல்டர் பெர்னான்டோ, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்ன, விமானப்படை தளபதி எயர்மார்ஷல் ரெரன்ஸ் குணவர்தன, கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் மோகன் சமரசேகர, பொலிஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா மற்றும் முப்படை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டில் ஒரு கட்டத்தில் கருத்து வெளியிட்ட கூட்டுப்படைத் தலைமையக தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க ' மனித உரிமை மீறலுக்கு தனியே படையினரை

[3 ஆம் பக்கம் பார்க்க]

## வாதுவவில் வவுச்சர்

(யாழ்பபாணம்)

வெகுவிரைவில் யாழ். வர இருக்கும் வாதுவ கப்பலில் ஏப்பிரல் மாத பென்சன் வவுச்சரும் உணவு முத்திரை, உலர் உணவு முத்திரை மற்றும் 1954 ஆம் ஆண்டுக்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்திற்கான விண்ணப்பப் படிவம் போன்றன எடுத்துவரப்படவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

( 3 ஆம் பக்கம் பார்க்க )

## நியமனம் இல்லை

(யாழ்ப்பாணம்)

இலங்கை கணக்காளர் சேவையினர் தமது சிரேஷ்ட அதிகாரிகளையும் பிரதேச செயலர் பதவிக்கு நியமிக்கப்பட வேண்டுமென அரசாங்கத்தை கோரியுள்ளனர்.

இதேவேளை இவர்களுக்கு பிரதேச செயலர் நியமனங்கள் வழங்கக்கூடாதென இலங்கை நிர்வாகசேவையினர் அரசாங்கத்திடம் தமது எதிர்ப்பை தெரிவித்ததை அடுத்து இலங்கை கணக்காளர் சேவையினரின் கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துவிட்டதாக யாழ். அரசாங்க அதிபரின் செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது. [சி]

# புதுவருட காலத்தில் புலிகள் தாக்கலாமாம்

## படையினர் லீவுகள் ரத்து

[கொழும்பு]

புதுவருட பண்டிகைக் காலத்தில் இராணுவ நிலைகள் மீது விடுதலைபபுலிகள்திடீர்த் தாக்குதல்களை நடாத்தக் கூடுமென்று சிறிலங்காப் பாதுகாப்பு படையினர் மத்தியில் பீதி ஏற்பட்டுள்ளது.

இக்காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் தாக்குதல் தொடுத்தால் அவ்வாறான தாக்குதல்களை எதிர்கொள்வதற்காக பாதுகாப்புப்படையினர் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் மறு அறிவித்தல் வரை பாதுகாப்புப்படையினரது லீவுகள் அனைத்தும் ரத்துச்செய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது. மேலும் வடபகுதிக்கு மேலதிகப் படைப் பிரிவுகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன அதேவேளை புலிகளின் தாக்குதல்களை முறியடிப்பதற்காக விமானப்படையினரும் தயார்நிலையில் உள்ளனர் எனவும் அனுராதபுரம், பலாலி, சீனன்குடா ஆகிய விமானப்படைத்தளங்களில் குண்டு வீச்சு விமானங்களும், உலங்குவானூர்திகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## மண்ணெய் விநியோகம்

நில்கிரியில் வந்த மண்ணெண்ணெய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக திட்டப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதுவரை உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் மட்டுமே இம் மண்ணெண்ணெய பெற்று குடும்ப அட்டைக்கு ஒரு லீற்றர் மண்ணெண்ணெயை விநியோகிக்க ஆரம்பித்துள்ளது எனவும் ஏனைய ப.நோ.கூ.சங்கங்கள் மண்ணெண்ணெயை பெற்றுக் கொள்ளவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 5,000 பீப்பா மண்ணெய் மாதாந்தம் அனுப்ப சம்மதம்


## அரச அதிபர் தகவல்

குடாநாட்டுக்கு மாதாந்தம் 5,000 பரல் மண்ணெண்ணெய் அனுப்பமுப்படைத் தலைமைச் செயலகம் அனுமதி வழங்கியுள்ளதுஎன அரசாங்க அதிபர் கொழும்பிலிருந்து அனுப்பிய செய்திக்குறிப் பொன்று தெரிவிக்கின்றது.

குடாநாட்டுக்கான மண்ணெண்ணெய் தொடர்பாக அரசாங்க அதிபர் எடுத்த முயற்சியின் பலனாகவே இம் மண்ணெண்ணெயை கப்பல் மூலம் அனுப்புவதற்கு முப்படைத் தலைமைச் செயலகம் அனுமதி வழங்கியுள்ளதாக தெரியவருகின்றது. (சி)



நேற்று பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறிய தமிழீழ காவல் துறையினரின் மூன்றாம் அணியினரின் அணிவகுப்பு மரியாதையினை தமிழீழ விடுதலைப்புலிகளின் துணைத் தளபதி திரு. பால்ராஜ் ஏற்றுக் கொள்வதனையும் அவருடன் தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் அருகில் நிற்பதனையும் படத்தில் காணலாம்.



தமிழீழ காவல்துறையினரின் மூன்றாம் அணியினரின் அணிவகுப்பினை தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் துணைத் தளபதி திரு. பால்ராஜ் பார்வையிடுவதனையும், அவருடன் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் செல்வதனையும படத்தில் காணலாம்.

# தமிழீழ காவல்துறை 3வது அணி வெளியேறியது

தமிழீழ காவல் துறையின் மூன்றாவது அணி தனது பயிற்சியை முடித்து வெளியேறும் மரியாதை அணிவகுப்பு நேற்றுக்காலை 7-15 மணிக்கு இடம்பெற்றது.

இம் மரியாதை அணிவகுப்பை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் துணைத் தளபதி பால்ராஜ் ஏற்றுக்கொண்டார். தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் நடேசனும் இந்த மரியாதை ஏற்பில் கலந்துகொண்டார். புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திருமதி பாலசிங்கம், புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன், யாழ். மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் இளம்பரிதி மேலும் விடுதலைப்புலி

(3ஆம் பக்கம் பார்க்க)

ஆலங்கேணியில்

## "புக்காரா" குண்டுவீச்சு; பொருள்கள் எரிந்தன

ஆலங்கேணிக் கடற்கரையோரப் பகுதிகள்மீது சிறிலங்கா விமானப்படையினரின் ''புக்காரா'' விமானங்கள் குண்டுத்தாக்குதல் நடாத்தியுள்ளதாகத் தெரியவருகின்றது.

கடந்த திங்கட்கிழமை நடாத்தப்பட்ட இத்தாக்குதலின்

(3ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## செந்தமிழ் பாட்டு இசை நிகழ்ச்சி

யாழோசை மன்றக் கலை மேம்பாட்டிற்காக யாழோசையினருடன் பல பாடகர்கள், பாடகிகள் பங்கேற்று சிறப்பிக்கவுள்ளனர் இந்நிகழ்ச்சி யாழ் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. நுழைவாயில் ரிக்கெட்டுக்களை யாழ். பூபாலசிங்கம்புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம் (4640)

## மழலை மேதைகள் போட்டி

பாலர் ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் கற்பிக்கும் பாலர்கள் மட்டும் பங்குபற்றலாம். பரிசுகள் வழங்கப்படும். சனி ஞாயிற்றுக்கிழமையில் தொடர்பு கொள்ளவும். பாலர் ஆசிரியர் சங்கம் உயர் கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (4084)

## தவறிவிட்டது

க. றேமலதா என்பவரது அடையாள அட்டை இல. 688190681V (20ந் திகதி சனிக்கிழமை) இராமநாதன் வீதியிலிருந்து பல்கலைக்கழகத்திற்கிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் அலுவலகத்தில்ஒப்படைக்கவும்.. (சி/6363)

## ஜெசித்தாரா உணவகம்

நீங்கள் சுவையான உணவை எங்கும் உண்ணலாம். நாங்கள் உங்கள் உணவு வகைகளுக்கு மேலும் சுவையூட்டுகின்றோம். வந்து பரீட்சித்துப் பாருங்கள். ஜெசித்தாரா. சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை சுண்டிக்குளி. (சி/6358)

## உங்களை அழைக்கின்றது

யோ.எக்கட்டனின் ஜெசித்தாரா உணவகம் சுண்டுக்குளி மகளிர், கல்லூரிமுன்ஒழுங்கை. மதிய உணவுப் பாசல்கள் பகல் 11/30மணி முதல் பெற்றுக் கொள்ளலாம். எங்களுக்குமுன் கூட்டியே அறிவித்தால் நேரடியாக அனுப்பி வைக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு: முகாமையாளர் ஜெசித்தாரா-சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, (சி 6357)

## கொம்பக்ட் டிஸ்க்கில் புதிய பாடல்கள்

அண்மையில் வெளியான புதிய பாடல்கள் COMPACT DISC இல் வெளிவந்துள்ளது மாஸ்ரர் பிரதியாகப் பதிவு செய்ய விரும்பும் ஒலிப்பதிவு நிலையங்கள் - தொடர்பு கொள்ளுங்கள் S. சந்திரமோகன் (மோகன்) ஷண் றெக்கோடிங் ஸ்பொட், நவீன சந்தை, யாழ்நகர். 4082)

## பாலராசிரியராக

பாலராசிரியராக தபால்வழியிலும் சனி, ஞாயிறு நேரிலும், பயிற்சி பெறலாம். சனிக்கிழமைகளிலும் சந்திக்கலாம். க.பொ.த. [சா/த] கடைசித் தகைமை. பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (சி-4083)

## NEWMASTER INSTITUTE

B. M. C. LANE, JAFFNA,

**★95-A/L★**

08-09 —விலங்கியல்
09-10 —தாவரவியல்
10-11 —இரசாயனம்
11-12 —பௌதிகம்
12-14 — தூய-பிரயோக கணிதம்.

★ ஆரம்பம்: ★

10-04-1993

சனிக்கிழமை

(சி/6362)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

**95 கலை, வர்த்தக வகுப்புக்கள்**

ஆரம்பம் 10-4-93, 10-00 மணி

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — திரு. தேவா |
| கணக்கியல் | — திரு. S. K. பிரபாகரன் |
| அளவையியல் | — திரு. விக்கி |
| தமிழ் | — திரு. குழந்தை |
| இந்துநாகரிகம் ) இந்துசமயம் ) | — திரு காரைசுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — திரு. குணராஜா |
| அரசியல் | — திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — திரு. சிறிதரன் |

ஃ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
ஃ அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் முதல் 200 மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

(சி-6335)

## 44-வது ஆண்டு நிறைவும் பொருட்காட்சியும்

உரும்பராய் வடக்கு கணேசா சனசமூக நிலைய 44-வது ஆண்டு நிறைவுவிழாவும் பொருட்காட்சி விற்பனையும் 10-ம், 11-ம் திகதிகளில் உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெறும்.

10 ஆம் திகதி சனி பி. ப. 2 மணியளவில் பொருட்காட்சி விழாவும், 11 ஆம் திகதி ஞாயிறு மு. ப. 11 மணியளவில் பொருட்காட்சியும், விற்பனையும் இடம்பெறும்.

## G. C. E. (A/L) - 1995

**கலை, வர்த்தக வகுப்புக்கள்**

**ஆரம்பம் : 10-04-93**

பிரிவு I காலை 8.00மணி

யாழ்.நகரில் இன்று முன்னணி ஆசிரியர் குழுவைக் கொண்ட தனித்துவம் வாய்ந்த ஒரே ஒரு நிறுவனம்

**கலை வர்த்தகக் கல்லூரி**

**C. C. A.**

வெலிங்டன் சந்திக்கருகாமை, யாழ்ப்பாணம்.

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்குழு

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. உதயன் |
| கணக்கியல் | — திரு. ஸ்ரீ |
| வர்த்தகம் | — திரு. இரட்ணம் |
| இந்துநாகரிகம் | — திரு. ஜோதீஸ்வரன் |
| அளவையியல் | — திரு. சயந்தன் |
| புவியியல் | — திரு. வேலாயுதபிள்ளை |
| அரசியல் | — திரு. பஞ்சு |
| கிறிஸ்தவ நாகரிகம் | — திரு. செபஸ்ரீன் |

(சி/6365) - நிர்வாகி

## O/L DAY CLASSES

ஆரம்பம்: **10 - 04- 93**

காலை 8.00 மணி

❋ O/L EVENING CLASSES (மாலை நேர வகுப்பு)

**பிரிவு 111** ஆரம்பம் : **10-04-93**

மாலை3.00மணி

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி/6353)

## Modern Education Centre

KARAVEDDY

**95A/L கலை வர்த்தக வகுப்புக்கள்**

ஆரம்பம்: 10-04-93 [சனி] காலை 9மணி

பொருளியல் — திரு. லோகசிங்கம்

## மங்களகரமான திறப்புவிழா

(ஸ்தாபன இடமாற்றம்)

இதுவரை காலமும் நடேசன் ரேடிங் கம்பனி இல.165 காங்கேசன்துறை வீதியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் இல. 288, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள கலைமகள் வர்த்தக நிலையத்தில் ஆங்கீரச வருடம் பங்குனித் திங்கள் 26ஆம் நாள் (8.4.93) இன்று வியாழக்கிழமை காலை 7.00 மணி முதல் 10.00 மணி வரையில் உள்ள சுபமுகூர்த்த வேளையில் ஆரம்பித்து வைக்கப்படும் என்பதை வர்த்தக அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

க. நந்தகுமாரன் (நந்தன்)

கிளை ஸ்தாபனம்: நந்தினி களஞ்சியம் 303, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

கலைமகள் வர்த்தக நிலையம் 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(4641)

## நினைவு கூருகின்றோம்... 1993-04-08

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார் - பூநகரிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய -

குமா [இரத்தினம் குமாரசாமி - கறுக்காந்தீவு, பூநகரி - மன்னார்]

1987 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய .

ஈசன் [குமாரசேகரம் கமலநாதன் - திருமலை]

யாழ் கோப்பாய் பாலத்தடியில் உலங்குவானூர்தியின் மூலம் தரையிறங்க முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

சிவா [சுப்பையா சிறிராஜேஸ்வரன் - பூம்புகார். கல்மடு - வவுனியா]

சுருளி [மகாலிங்கம் விஜயராசா - சாவற்காடு, மானிப்பாய் - யாழ்.]

செனித் [நடராசா ஜெயப்பிரகாஷ் - நயினாதீவு - யாழ் ]

1988 ஆம் ஆண்டு மட்டு - கிண்ணியடிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சரவெய்திய -

லெப். சுதர்சன் [சச்சிதானந்தம் தாமன் புஸ்பராசா - கிரான் - மட்டு.]

யோசப்-மாமா [நாகமணி சித்திரன் - கிரான் - மட்டு.]

மட்டு - திகிலவெட்டைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

நிக்சன் [பிள்ளையான் சர்வராசா - சந்திவெளி - மட்டு.]

1989 ஆம் ஆண்டு யாழ். ஊர்காவற்றுறையில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

லெப். குட்டி-கண்ணன் [மருதப்பு யோகேஸ்வரன் - 3-ம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு - யாழ்.]

கஜன்

# விக்னா கல்வி நிறுவனம்

அழைக்கின்றது

யோ.எக்கட்டனின் ஜெசித் தாரா உணவகம் சுண்டுக்குளி மகளிர், கல்லூரிமுன்ஒழுங்கை. மதிய உணவுப் பாசல்கள் பகல் 11/30மணி முதல் பெற்றுக் கொள்ளலாம். எங்களுக்குமுன் கூட்டியே அறிவித்தால் நேரடி யாக அனுப்பி வைக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு: முகா மையாளர் ஜெசித்தாரா-சுண் டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, (சி 6357)

---

| | | |
|---|---|---|
| அளவையியல் | — | திரு. விக்கி |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| இந்துநாகரிகம் ) இந்துசமயம் ) | — | திரு. காரைசுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — | திரு. குணராஜா |
| அரசியல் | — | திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — | திரு. சிறிதரன் |

ஃ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
ஃ அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் முதல் 200 மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

(சி-6335)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(O/L வகுப்புக்களுக்குத் தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L**

**பிரிவு III**

**DAY CLASSES** [8.00 - 2.00]

ஆரம்பம்: 08-04-93, 8.00 மணி

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்
★ வாரத்தில் 4 நாட்கள் நடைபெறும்
★ கணிதம், விஞ்ஞானம் வாரத்தில் 6 மணித்தியாலங்கள் நடைபெறும்
★ இவ்வருடம் 5 பிரிவுகள் மட்டுமே ஆரம்பமாகும்.

(சி-6336)

---

LUXINTENEBRIS

# JAFFNA ENGLISH ACADEMY

## ENGLISH TUTORS-IN-CHARGE

Applications are invited from competent persons of either sex for the above posts. Candidates must be suitably qualified and experienced teachers of English OR must have high competency and aptitude for teaching spoken and written English. The Tutors - In-Charge will work according to the scheme prepared by us and also be responsible for training the students upto the levels specified by us. The selected candidates would be entitled to remunerations commensurating with their qualifications and experiences.

Formal written applications with complete bio-data may be sent to us for our perusal. No personal intimations will be sent to the interviewees.

**All candidates please call over personally at 10 a.m on 10-4-93 for an interview.**

9, RAKKA LANE,
CHUNDIKULI,
JAFFNA.

Director of Studies.

(சி-6325)

---

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி/6353)

---

# Modern Education Centre

KARAVEDDY

# 95A/L கலை வர்த்தக வகுப்புக்கள்

ஆரம்பம்: 10-04-93 [சனி] காலை 9மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. லோகசிங்கம் |
| கணக்கியல் | — | திரு. பவான் |
| வர்த்தகம் | — | திரு. சோதிலிங்கம் |
| அளவையியல் | — | திரு. விக்கி |
| இந்துநாகரிகம் | — | திரு. ஜோதீஸ்வரன் |
| தமிழ் | — | திரு. நடா |
| புவியியல் | — | திரு. சு. கிருஷ்ணராஜா |

(3421)

---

மானிப்பாய் - யாழ்.]

செனித் [நடராசா ஜெயப்பிரகாஷ் - நயினாதீவு - யாழ் ]

1988 ஆம் ஆண்டு மட்டு - கிண்ணியடிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

லெப். சுதர்சன் [சச்சிதானந்தம் தாமன் புஸ்பராசா - கிரான் - மட்டு.]

யோசப்-மாமா [நாகமணி சித்திரன் - கிரான் - மட்டு.]

மட்டு - திகிலவெட்டைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

நிக்சன் [பிள்ளையான் சர்வராசா - சந்திவெளி - மட்டு.]

1989 ஆம் ஆண்டு யாழ். ஊர்காவற்றுறையில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

லெப். குட்டி-கண்ணன் [மருதப்பு யோகேஸ்வரன் - 3-ம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு - யாழ்.]

கஜன்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி/6361)

---

ஏப்ரல் 10 முதல்

# யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

# A/L-95

இரசாயனவியல்
**திரு. மகாதேவா**
பௌதீகவியல்
**திரு. வர்ணம்**
தாவரவியல்
**திரு. ஐங்கரநேசன்**
விலங்கியல்
**திரு. கெங்காதரன்**
தூய/பிரயோக கணிதம்
**திரு. கிருஸ்ணா**

(சி-6338)

---

ஏப்ரல் 10 முதல்

# யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

# A/L-95

இரசாயனவியல்
**திரு. மகாதேவா**
பௌதீகவியல்
**திரு. வர்ணம்**
தாவரவியல்
**திரு. ஐங்கரநேசன்**
விலங்கியல்
**திரு. கெங்காதரன்**
தூய/பிரயோக கணிதம்
**திரு. கிருஸ்ணா**

(சி-6339)

சிந்தனைக்கு

அறியாமை, துவேஷத்தை நிரந்தரமாக நிலை நாட்டி, தவறை நீடிக்க வைக்கிறது.

— ராபர்ட் ஹால்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 08-04-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண்-05

## மாகாணசபைத் தேர்தலும் இனப்பிரச்சினைத் தீர்வும்

மாகாண சபைத் தேர்தலை இனப்பிரச்சினைத் தீர்விற்கு மக்களின் அங்கீகாரம் பெறுவதற்கான தேர்தலாகப் பயன்படுத்த வேண்டும் என சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கூட்டங்களில் பேசி வருகின்றார். சிறிலங்கா ஜனாதிபதியின் இப்பேச்சானது சற்றுச் சிந்திக்கத் தெரிந்த எந்த இன மக்களுக்கும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

ஏனெனில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மக்களின் அங்கீகாரம் பெற வேண்டுமானால், பிரச்சினைக்கான தீர்வு என்ன என்பது பற்றி மக்களுக்கு ஏதாகிலும் தெரிய வேண்டும், இல்லையேல் மக்கள் தீர்வென எதை அங்கீகரிப்பது? எதை நிராகரிப்பது?

இதேவேளை சிறிலங்கா ஜனாதிபதி பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் இறுதி அறிக்கையை அரசாங்கம் நன்கு பரிசீலனை செய்தே இனப் பிரச்சினைக்கு தனது இறுதித் திட்டத்தை சமர்ப்பிக்கும். அது முழுமையாகச் செயற்படுத்தப்படும் எனவும் தெரிவித்து வருகின்றார்,

ஆனால் இன்று பாராளுமன்றத் தெரிவுக்குழு தனது இறுதி அறிக்கையை தயாரிக்கும் நிலையில் உள்ளதா என்பது கேள்விக்குரியதே, ஏனெனில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் இடைக்கால அறிக்கை வெளிவந்த உடனேயே அதில் பங்கு பற்றி வந்த தமிழ்க் குழுக்கள் அதனை நிராகரித்ததோடு தெரிவுக் குழுவில் இருந்து வெளியேறியும் உள்ளன.

இதனால், தெரிவுக் குழுவினால் எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு ஒன்றைக் காண முடியுமா என்பது சந்தேகமே. அத்தோடு கடந்த மாதம் 26 ஆம் திகதி கூடவிருந்த பாராளுமன்ற தெரிவுக் குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே 23 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்றக் கூட்டத் தொடர் ஒத்திவைக்கப்பட்டதால் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் கூட்டத் தொடரும் ஒத்திவைக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம் என அரசியல் விமர்சகர்கள் சுட்டிக் காட்டியபோதும் பாராளுமன்றக் கூட்டத் தொடர் ஒத்திவைக்கப்பட்டது.

# போலி சி.ஐ.டி. நடமாட்டம் கொழும்பில் அதிகரிப்பு

## - பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

தலை நகரில் போலி இரகசியப் பொலிஸாரின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாக பொலிஸார் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர். பொலிசார் தமது எச்சரிக்கையில் மேலும், இரகசிய பொலிஸார் எனக் கூறிக்கொண்டு வீடுகளையோ ஆட்களையோ சோதனையிட முற்படுவோர் பற்றி பொதுமக்கள் அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு உடன் தகவல் தர வேண்டும் என்றும் இதன் மூலம் பணம் அல்லது பொருள் இழப்புக்கள் ஏற்படுவதைத் தடுக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. துண்டுப் பிரசுரங்கள் மூலம் பொலிஸாரால் விடுக்கப்பட்டிருக்கும் இந்த எச்சரிக்கையில் பணத்தை அல்லது பொருளை பறிக்க எவராவது முயன்றால் சத்தமிட்டு அருகில் உள்ளவர்களை உதவிக்கு அழைக்கும்படியும் கோரப்பட்டுள்ளது.

புறக்கோட்டை பொலிஸார் இத் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து வருகின்றார்கள் போலியான அடையாள அட்டைகளைக் காட்டி வடக்கு, கிழக்குபகுதிகளிலிருந்து வரும் தமிழர்களிடம் பணம்பறிக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருவதை அடுத்தே இத் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்படுவதாகவும் பொலிஸார் மேலும் கூறியுள்ளார்கள்.

## மாணவர் அனுமதிக்காக நன்கொடை கோரக்கூடாது

### - கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களுக்கு என்ற பெயரில் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களிடமிருந்து நன்கொடைகள் மற்றும் அன்பளிப்புக்களை பாடசாலை அதிபர்கள் கோருவது பற்றி கல்வி அமைச்சு எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

கொழும்பில் வெளியிடப்பட்ட அந்த எச்சரிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது, பாடசாலை அதிபர் எவரும் இத்தகைய அன்பளிப்பு மற்றும் நன்கொடைகளைக் கோரும் பட்சத்தில் அது பற்றி சம்பந்தப்பட்டோர் கல்வி அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவரவேண்டும்என்றும் கோரப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இதுபற்றி மேலும் கூறுகையில், சட்டத்திற்குப் புறம்பான எந்தக் கொடுப்பனவுகளையும் பெற்றோர் மேற்கொள்ளக்கூடாதெனவும், எந்த வகுப்பிலும் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு அன்பளிப்பு அல்லது நன்கொடை கோருவது முறையற்றது என்றும் தெரிவித்தார்.

## பாதுகாப்பு ஏற்பாடுகள் கட்டுநாயக்காவில் தீவிரம்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தைச் சுற்றி பொலிசார் தீவிரகண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும், பயணிகளும், வாகனங்களும் கடுமையான சோதனைக்கு உள்ளாக்கப்படுவதாகவும் தெரிய வருகின்றது.

விமானநிலைய வளாகத்தில் குண்டுகள் வெடிக்க வைக்கப்படலாம் என்ற அச்சத்தினாலேயே பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது.

## பருவகாலக் கடன் இல. வங்கி வழங்கியது

புலோலி மேற்கு பகுதியில் விவசாயத்திலீடுபடும் 42 விவசாயிகளுக்கு பருவகாலக் கடனாக ஏழுஇலட்சத்துஎழுபத்து நாலாயிரம் ரூபாவை இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளை வழங்கி விவசாயிகளை ஊக்குவித்துள்ளது. இத்தகவலை புலோலி மேற்கு விவசாயிகள் சங்கத் தலைவர் திரு. ஆ. வேலும் மயிலும், விவசாயிகளின் விவசாய முயற்சிகளை இலங்கைவங்கி பருத்தித்துறை கிளை, கடன் வழங்கு அதிகாரிகளான ச. சிவநாதன், திரு பஞ்சலிங்கம் ஆகியோர் பார்வையிட்டபின் நடைபெற்ற விவசாயிகள் கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். (25)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலை ''பரிசளிப்பு விழா-1993'' இன்று முற்பகல் 9.00மணிக்கு மேற்படி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## விளையாட்டு

(மானிப்பாய்)

யாழ். பல்கலைக்கழக அணிக்கும், கிராஸ் கொப்பர்ஸ் அணிக்கும் இடையிலான ஹொக்கியாட்டம் இன்று மாலை 4.30 மணிக்கு பல்கலைக்கழக பழைய மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ் பல்கலைக்கழக அணிக்கு கே ஈ.பிரதீபனும், கிறாஸ் கொப்பர்ஸ் அணிக்கு றொகானும் தலைமை வகிப்பர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை யாழ் செயலகத்தினால் நடாத்தப்படும் விலகல் முறை கொண்ட ஹொக்கியாட்டம் இம்மாதம் 27, 28 29-ம் திகதிகளில் பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (07)

## உன்பணி தொடர்வோம் அம்மா

ஊனினை உருக்கிக் கொண்டாய்
உள்ளத்தில் உறுதி கொண்டாய்
தேனினும் இனிய எங்கள்
செந்தமிழ் மொழியும் மண்ணும்
வானிலும் உயர்ந்த தென்று
வந்த இந்திய அரசின்
கோனினுக் குரைத்து உன்தன்
கொள்கையில் வெற்றி கண்டாய்.

அன்னை பூபதித் தாயே
ஆற்றிய உண்ணா நோன்பு
தன்னிக ரில்லாத் தியாகம்
சரித்திரம் சான்று கூறும்
இன்னுயிர் மண்ணுக் காக
ஈந்த தால்பெரு மைகொண்டாய்
உன்பணி தொடர்வோம் அம்மா
ஓய்ந்திடோம் வெற்றி காண்போம்.

- வ. யோ

## ஐ. ஐ. தே. மு. வேட்பாளர் கடத்திச் செல்லப்பட்டார்

(கொழும்பு)

லலித் அத்துலத்முதலி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் கொழும்பு மாகாணசபைவேட்பாளர் ஒருவர் நேற்று இனந் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டார்.

குலதுங்க எனும் இந்தவேட்பாளர் கொழும்பிலுள்ள தனது வீட்டுக்கு வெளியே நின்றபோது காரில் வந்த கும்பல் ஒன்று அவரை காரினுள் தூக்கிப் போட்டுக் கொண்டு சென்றுவிட்டது. சிலநிமிட நேரங்களில் நடந்து முடிந்த இச் சம்பவத்தை சிறுவன் ஒருவன் மட்டுமே நேரில் கண்டுள்ளார். இவ் வேட்பாளர் ஊன்றுகோல் உதவியுடனேயே நடமாடுபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேசமயம் இக் கட்சியின் மற்றுமொரு வேட்பாளரின் வீடும் அவரது உறவினர் ஒருவரினது வீடும் 20 பேரடங்கிய கும்பல் ஒன்றினால் சூறையாடப்பட்டது. அப்போது அந்த வேட்பாளர் வீட்டில் இருக்கவில்லை.

இச் சம்பவங்கள் அரசியல் நோக்கம் உடையது என ஐ. ஐ. தே. மு. வட்டாரங்கள் குறிப்பிட்டன.

## மட்டு. நாகமுனையில் பல பொதுமக்கள் கைது

மட்டக்களப்பு அம்பிலாந்துறை நாகமுனை என்ற கிராமத்தைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் பல பொதுமக்களைக் கைதுசெய்து முகாம் கொண்டு சென்றனர்.

கடந்த சனியன்று காலை அம்பிலாந்துறையில் முகாமிட்டுள்ளராணுவத்தினரே இச் சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர். பின்னர் இவர்கள் மூன்று பேரைத் தடுத்துவைத்துக் கொண்டு ஏனையோரை விடுதலை செய்தனர்.

நாகமுனையைச் சேர்ந்தவர்களான நல்லதம்பி பவானந்தன் (வயது 20), கதிர்காமத்தம்பி சின்னவன் (வயது 22), சாமித்தம்பி மகேந்திரராஜா (வயது 24) ஆகியோரே இவ்வாறு தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களாவர்.

## அதிரடிப்படையால் தாய்மார் பெரும் துன்பம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் கைதுசெய்யப்படும் பொதுமக்களை அங்குள்ள அதிரடிப் படையினர் அடிமைகள் போல நடாத்துவதாகவும் பெண்களைக் கைதுசெய்து முகாமில் அடைத்துவைத்து சமையல் வேலைகளைச் செய்வித்துவருவதாகவும் தெரியவருகிறது. சமையல் வேலைக்குப் பயன்படுத்திவருகின்றனர்.

இவ்வாறு தடுத்துவைக்கப்பட்டுள்ள விநாயகபுரத்தைச் சேர்ந்த சில பெண்களின் விபரம் வருமாறு:

இலட்சுமி (4 பிள்ளைகள்), மனோன்மணி (3 பிள்ளைகள்), நாகேஸ்வரி (4 பிள்ளைகள்), இந்திராணி (4 பிள்ளைகள்),

போர்

''பாதுகாப்புச் செயலர் பதவியிருந்து விலகி அவுஸ்ரேலியாவுக்கான உயர் ஸ்தானிகராக நியமனம் பெறவுள்ள ஜெனரல் சிறில் ரணதுங்காவின் அறிக்கை கடந்த வாரத்



புக்காரா

போது பொதுமக்களின் பல பெறுமதிவாய்ந்த பொருள்கள் தீக்கிரையாகியதாகவும் அறிய வருகின்றது.

மேற்படி கடற்கரையோரமாகக் களஞ்சியப்படுத்திவைக்

யுத்தத்தை

மட்டும் குற்றம்சாட்ட முடியாது. மனித உரிமை மீறலுக்கு அரசியல் வாதிகளும் காரணம் என அவர் சுட்டிக் காட்டினார்.

மனித உரிமைமீறல் குறித்து

ஆனால் இன்று பாராளுமன்றத் தெரிவுக்குழு தனது இறுதி அறிக்கையை தயாரிக்கும் நிலையில் உள்ளதா என்பது கேள்விக்குரியதே, ஏனெனில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் இடைக்கால அறிக்கை வெளிவந்த உடனேயே அதில் பங்கு பற்றி வந்த தமிழ்க் குழுக்கள் அதனை நிராகரித்ததோடு தெரிவுக் குழுவில் இருந்து வெளியேறியும் உள்ளன.

இதனால். தெரிவுக் குழுவினால் எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு ஒன்றைக் காண முடியுமா என்பது சந்தேகமே. அத்தோடு கடந்த மாதம் 26 ஆம் திகதி கூடவிருந்த பாராளுமன்ற தெரிவுக் குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே 23 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்றக் கூட்டத் தொடர் ஒத்திவைக்கப்பட்டதால் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் கூட்டத் தொடரும் ஒத்திவைக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம் என அரசியல் விமர்சகர்கள் சுட்டிக் காட்டியபோதும் பாராளுமன்றக் கூட்டத் தொடர் ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அடுத்த கூட்டம் நடைபெற வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இனி அடுத்த கட்டக் கூட்டத் தொடர் பெரும்பாலும் மாகாண சபைத் தேர்தல் முடிவுற்ற பின்னரே நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. தேர்தல் காலங்களில் பாராளுமன்றக் கூட்டத் தொடர்கள் நடைபெறுவதில்லை என்பது அரசாங்கத்திற்குப் புரியாத புதிய விடயமல்ல.

இந்நிலையில் மாகாண சபைத் தேர்தலுக்கு முன் பாராளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைப்பதென்பதும், அதைப் பரிசீலித்து அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை முன்வைப்பதென்பதும் சாத்தியமாகக் கூடிய ஒன்றல்ல. நாற்பது வருடங்களுக்கு மேலாகத் தீர்வு காண முடியாத பிரச்சினைக்கு நான்கு நாட்களில் தீர்வு காண்பதென்பது மந்திரத்தால் மாங்காய் பிடுங்கும் செயலுக்கு ஒப்பான தொன்று என்றே கூறலாம்.

இதேவேளை இது சாத்தியமாகாத ஒன்று என்பது ஜனாதிபதி பிரேமதாசாவிற்குத் தெரியாதஒன்றுமல்ல. இது திரு. பிரேமதாசாவின் அரசியல் தந்திரமாகும். இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காண்பதென்பதும், போரை நிறுத்துவதென்பதும் ஜனாதிபதி பிரேமதாசா தனக்கும், தனது அரசாங்கத்திற்கும் தானே அழிவைத் தேடிக் கொள்வதாக அமையும் என்பதும் அவருக்குத் நன்கு தெரியும் இதனைப் புரிந்துகொண்டே பிரச்சினைக்கு தீர்வு ஒன்றை முன்வைக்காது அரசாங்கம் இழுத்தடித்து வருகின்றது என்பதே உண்மை

இந்நிலையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு எதையும் முன்வைக்காமல், அதேவேளை பிரச்சினையைத் தீர்க்க அரசு தீவிரமாக முனைப்புடன் செயற்பட்டு வருவதாகக் காட்டிக் கொள்வதே திரு பிரேமதாசாவின் திட்டமாகும். ஆகையினால் இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வு ஒன்றை முன்வைக்கும் என யாராவது எதிர்பார்ப்பார்களேயானால் அதுஅவர்களது விளக்கமின்மையைக் காட்டுவதாகவே இருக்கும்.

---

ளாக்கப்படுவதாகவும் தெரிய பதாக கூறப்படுகின்றது.

## பருவகாலக் கடன் இல. வங்கி வழங்கியது

புலோலி மேற்கு பகுதியில் விவசாயத்திலீடுபடும் 42 விவசாயிகளுக்கு பருவகாலக் கடனாக ஏழுஇலட்சத்துஎழுபத்து நாலாயிரம் ரூபாவை இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளை வழங்கி விவசாயிகளை ஊக்குவித்துள்ளது. இத்தகவலை புலோலி மேற்கு விவசாயிகள் சங்கத் தலைவர் திரு. ஆ. வேலும் மயிலும், விவசாயிகளின் விவசாய முயற்சிகளை இலங்கைவங்கி பருத்தித்துறை கிளை, கடன் வழங்கு அதிகாரிகளான ச. சிவநாதன், திரு பஞ்சலிங்கம் ஆகியோர் பார்வையிட்டபின் நடைபெற்ற விவசாயிகள் கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். (25)

---

போர்

"பாதுகாப்புச் செயலர் பதவியிருந்து விலகி அவுஸ்ரேலியாவுக்கான உயர் ஸ்தானிகராக நியமனம் பெறவுள்ள ஜெனரல் சிறில் ரணதுங்காவின் அறிக்கை கடந்த வாரத்தில் சர்வதேச மற்றும் உள்ளூர் தொடர்புச் சாதனங்களில் வெளியானதும், அவருக்கும் இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் இடையில் மோதலை மேலும் அதிகரித்துள்ளது. இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்ணா மற்றும் அவரைச் சார்ந்த அதிகாரிகளுக்கும் ஜெனரல் ரணதுங்காவுக்குமிடையில் பகைமை நிலவிவருவது ரகசியமல்ல.

"இராணுவத் தலைமை தமக்கிடையில் சண்டை போட்டுக்கொண்டிருக்கும் அதேவேளை புலிகள் இராணுவத்தின் மீது தாக்குதல்களைத் தொடர்வதன் மூலம் தமது மனோதத்துவ, அரசியல், பொருளாதார அடிப்படையிலான அரசுக்கு எதிரான பிரசாரத்தை ஒரளவு வெற்றிகரமாக மேற்கொள்ள முடிகிறது. மாறாக இராணுவத் தலைமைக் கூட்டமைப்பில் ஒழுங்கற்ற முறையில் செய்யப்படும் மாற்றங்களினால் புலிகளுக்கெதிரான யுத்தத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்டமுடியவில்லை. அதற்குப் பதிலாக அரச யுத்த இயந்திரத்தில் யுத்த தந்திரோபாயங்களை வகுக்கும் பிரதம அதிகாரிகள் மத்தியில் பகைமையே அதிகரித்துள்ளது.

"ஜெனரல் சிறில் ரணதுங்காவின் பதவியை விமானப் படைத்தளபதி வால்டர்பெர்னாண்டோ இந்த மாத இறுதியில் பொறுப்பேற்றதும், இராணுவத்தலைமைக்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும் இடையில் உள்ள விரிசல் சீரடையும் என இராணுவ அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

வடக்கு - கிழக்கின் பாதுகாப்பு நிலைகளுக்கு இராணுவத் தலைமை மீது பழிசுமத்திப் பயனில்லை யுத்த நடவடிக்கைகளுக்கு கூட்டுப் படை நடவடிக்கைத் தலைமையே பொறுப்பாக உள்ளது என்கிறார் ஓர் இராணுவ அதிகாரி" என்று கட்டுரையில் தெரிவிக்கிறார்.

"முப்படைகளையும், பொலிஸ் படையையும் அரசு கூட்டுப் படை நடவடிக்கை தலைமையின் கட்டுப்பாட்டின் கீழே வைத்துள்ளது. கடந்த எட்டு மாதங்களாகப் புலிகளுக்கு எதிராக எந்த விதபாரிய நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை" இவ்வாறு மேலும் தெரிவிக்கிறார் சமிந்திரா பெர்னான்டோ.

---

புக்காரா

போது பொதுமக்களின் பல பெறுமதிவாய்ந்த பொருள்கள் தீக்கிரையாகியதாகவும் அறிய வருகின்றது.

மேற்படி கடற்கரையோரமாகக் களஞ்சியப்படுத்திவைக்கப்பட்டிருந்த பொருள்கள்மீது குண்டுகள் வீழ்ந்து வெடித்ததனால் இவை தீக்கிரையாகியதாகவும் இதனால் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் நாசமாகியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

---

லலித்

யிடுவர் எனக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

மேல்மாகாண சபை முதலமைச்சர் பதவிக்கு சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணியின் சார்பில் திருமதி சந்திரிகா குமாரணதுங்க போட்டியிடலாம் எனக் கூறப்படுகின்றது. எனினும் தேர்தல் முடியும்வரை முதலமைச்சர் பதவிக்கு யார் யார் நியமிக்கப்படுவர் என்பதை ஐ.தே.க. வெளியிடமாட்டாது என அக்கட்சி வட்டாரங்கள் குறிப்பிட்டன.

---

வாதுவவில்

தற்போது கொழும்பு துறைமுகத்தில் தரித்திருக்கும் வாதுவ கப்பலில் மேற்படி பொருள்கள் ஏற்றப்படுகின்றதெனவும் இக்கப்பல் வெகு விரைவில் இங்கு வருமெனவும் தெரியவருகின்றது. இதேவேளை மெரினால் கப்பலில் 1100 மெற்றிக் தொன் மா எடுத்துவரப்படுகின்றதெனவும் இக் கப்பலும் விரைவில் வருமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. [சி]

---

ஹொக்கியாட்டம் இன்று மாலை 4.30 மணிக்கு பல்கலைக்கழக பழைய மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ் பல்கலைக்கழக அணிக்கு கே ஈ.பிரதீபனும், கிறாஸ் கொப்பர்ஸ் அணிக்கு றொகானும் தலைமை வகிப்பர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை யாழ் செயலகத்தினால் நடாத்தப்படும் விலகல் முறை கொண்ட ஹொக்கியாட்டம் இம்மாதம் 27, 28 29-ம் திகதிகளில் பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (07)

---

யுத்தத்தை

மட்டும் குற்றம்சாட்ட முடியாது. மனித உரிமை மீறலுக்கு அரசியல் வாதிகளும் காரணம் என அவர் சுட்டிக் காட்டினார்.

மனித உரிமைமீறல் குறித்து சிறிலங்காவிற்கு ஏற்பட்ட அபகீர்த்தி வடுவை இலகுவில் அழித்துவிட முடியவில்லை என இம்மாநாட்டில் கலந்து கொண்ட சட்டமா அதிபர் திலக் மாரப்பன கருத்துத் தெரிவித்தார். படையினரின் சில மனித உரிமை மீறல் சம்பவங்களை சுட்டிக் காட்டிய அவர் படை அதிகாரிகள் இச் சம்பவங்கள் நடைபெறாமல் தடுப்பதில் உறுதியுடன் செயற்படவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். கடந்த வருடம் ஆட்கள் காணாமற்போன சம்பவங்கள் 70 பதிவு செய்யப் பட்டுள்ளதாகவும், அவற்றில் அநேகமானவை கிழக்கு மாகாணத்திலேயே இடம் பெற்றுள்ளது என்பதை பிரட்மன் வீரக்கோன் ஒப்புக் கொண்டார்.

அப்போது கருத்து வெளியிட்ட விமானப்படை தளபதி ரெரன்ஸ் குணவர்த்தனா நாட்டைவிட்டு வெளியேறி வெளி நாடுகளுக்குச் செல்பவர்களின் பெயர்களும் காணாமற்போனவர் பட்டியலில் சேர்க்கப்படுவதாக குறிப்பிட்டார். எனினும் இதை பிரட்மன் வீரக்கோன் நிராகரித்தார். வாகனங்களில் வந்தவர்களாலேயே இவர்கள் கடத்திச் செல்லப்பட்டதாக முறையீடு செய்தவர்கள் கூறுகின்றனர் என பிரட்மன் சுட்டிக் காட்டினார்.

சிறிலங்கா பாதுகாப்புப் படையினரின் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச அமைப்புகள் கண்டனம் வெளியிட்டுவரும் இச்சமயத்தில் இந்த பாதுகாப்பு உயர் மாநாடும் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

தமிழீழ

கள் உறுப்பினர்கள் கண்ணா, பாலகுமாரன், பரா, காவல் துறை துணைப் பொறுப்பாளர் இளங்கோ, துணை அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ஜவான், யாழ். மாவட்ட தளபதி அன்பு மற்றும் பதுமன், செந்தாளன், ரேகா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பயிற்சியை முடித்துக்கொண்ட காவல்துறை உறுப்பினர்கள் யாழ். மாவட்டம், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் பணிக்காக அனுப்பி வைக்கப்படுவர்.

---

மட்டக்களப்பு அம்பிலாந்துறை நாகமுனை என்ற கிராமத்தைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் பல பொதுமக்களைக் கைதுசெய்து முகாம் கொண்டுசென்றனர்.

கடந்த சனியன்று காலை அம்பிலாந்துறையில் முகாமிட்டுள்ளராணுவத்தினரே இச் சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர். பின்னர் இவர்கள் மூன்று பேரைத் தடுத்து வைத்துக் கொண்டு ஏனையோரை விடுதலை செய்தனர்.

நாகமுனையைச் சேர்ந்தவர்களான நல்லதம்பி பவானந்தன் (வயது 20), கதிர்காமத்தம்பி சின்னவன் (வயது 22), சாமித்தம்பி மகேந்திரராஜா (வயது 24) ஆகியோரே இவ்வாறு தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களாவர்.

## அதிரடிப்படையால் தாய்மார் பெரும் துன்பம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் கைதுசெய்யப்படும் பொதுமக்களை அங்குள்ள அதிரடிப் படையினர் அடிமைகள் போல நடாத்துவதாகவும் பெண்களைக் கைதுசெய்து முகாமில் அடைத்துவைத்து சமையல் வேலைகளைச் செய்வித்துவருவதாகவும் தெரியவருகிறது.

திருக்கோவில் விசேட அதிரடிப்படையினரால் விநாயகபுரம் பகுதியைச்சேர்ந்த பல தாய்மார்கள் கைதுசெய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட பின் அடிமைகள்போல சமையல் வேலைக்குப் பயன்படுத்திவருகின்றனர்.

இவ்வாறு தடுத்துவைக்கப்பட்டுள்ள விநாயகபுரத்தைச் சேர்ந்த சில பெண்களின் விபரம் வருமாறு:

இலட்சுமி (4 பிள்ளைகள்), மனோன்மணி(3 பிள்ளைகள்), நாகேஸ்வரி (4 பிள்ளைகள்), இந்திராணி (4 பிள்ளைகள்), குஞ்சுப்பிள்ளை தவராஜா (2 பிள்ளைகள்).

இப்பிரதேசம்படையினரால் அடிக்கடி சுற்றிவளைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

## காலிழந்தபடை அதிகாரி மீது தமிழ்க்குழு தாக்குதல்

[கொழும்பு]

வெள்ளவத்தையில் தமிழ் குழு ஒன்று மேற்கொண்ட தாக்குதலில் கால்களை இழந்த இராணுவ லெப்டினன்ட் ஒருவரும் தாக்கப்பட்டார். இத்தாக்குதல் சம்பவம் கடந்த வாரத்தில் இடம்பெற்றது.

தாக்கப்பட்ட இராணுவ வீரர் 1991 நடுப்பகுதியில் கிழக்கு மாகாண யுத்த முனையில் காலொன்றை இழந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ தினமான கடந்த புதன்கிழமை அன்று பனாகொட முகாமைச் சேர்ந்தவரான இந்த லெப்டினன்ட் கொழும்பு- 6, ஈ-ஏ கூறே வீதியில் உள்ள தமது வீட்டில் நித்திரையில்இருந்திருக்கிறார். திடீரென்று வாக்கிரோக்கியுடன் நுழைந்த நான்கு பேர் அடங்கிய கோஷ்டி ஒன்று இவரைத் தாக்கியுள்ளது.

இரு வீடுகளுக்கு உரிமையாளரான ஒருவருக்கும், இந்த வீடு ஒன்றில் வாடகைக் குடியிருப்பாளருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறே இச்சண்டைக்கான காரணம் எனத் தெரியவருகிறது.

இந்த இரு வீடுகளில் ஒன்றின் வாடகைக் குடியிருப்பாளர் தமிழ் குழுத் தலைவர் ஒருவரின் காரியாலயத்தில் கடமை புரிபவர், இவருக்கு ஆதரவாகவே குழு தாக்குதல் நடத்தியது. சண்டையின் போது குழுத் தலைவரும் ஸ்தலத்தில் நின்றதாகவும், அவர் சண்டையில் பங்கு பற்றவில்லை என்றும் சம்பவத்தை பார்த்தவர்கள் தெரிவிக்கிறார்கள்.

---

## தையல் கண்காட்சி

[தொல்புரம்]

சுழிபுரம் மேற்கு ஐக்கிய நாணய சங்கத்தினால் தையல் கண்காட்சியும், விற்பனையும் நடாத்தப்படவுள்ளன. இவ் வைபவம் நாளை வெள்ளி அன்று காலை 9-00 மணியளவில் சங்க தையல் பயிற்சி நிலையத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. செ. லிங்கநாதன் அவர்களால் ஆரம்பித்து வைக்கப் படும்.

மேலும் தையல் பயிற்சியை நிறைவு செய்த மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளதென நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர் [41]

## குண்டு வெடிப்பு

(டில்லி)

உத்தரப்பிரதேசத்தின் கான்பூர்நகரில் நேற்று இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்றையடுத்து பதின்னான்கு மாடிக்கட்டடம் ஒன்று பலத்த சேதமடைந்துள்ளது.

ஈழநாதம்

# காங்கிரஸ் உறுப்பினர் உண்ணாவிரதப் போர்

(சென்னை)

தமிழக சட்டப் பேரவையின் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் நேற்று பிற்பகல் சென்னை கோட்டை முன்பாக உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

இரு காங்கிரஸ் உறுப்பினர்களான ஞானசேகரன், ரங்கநாதன் ஆகிய இருவரையும் பேரவை சபாநாயகர் கூட்டத் தொடரின் மிகுதி நாட்களுக்கு கலந்து கொள்ள தடைவிதித்ததை சபையில் விவாதிக்க சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா ஆட்சேபித்ததையடுத்தே இவர்கள் நேற்று இப்போராட்டத்தைநிகழ்த்தினர்.

முன்னதாக சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் இரு காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும் விதிக்கப்பட்ட தடையை நீக்குமாறும் அவர்கள் சபையில் ஒழுங்காகநடந்து கொள்வர் என உறுதியளித்ததையும் சபாநாயகருக்கு சுட்டிக்காட்டினார். ஆயினும் சபாநாயகர் அவர்கள் எழுத்து மூலமான மன்னிப்பை தந்தால் அதை பரிசீலிக்க முடியும் என்று திரும்பத்திரும்பக் கூறியதையடுத்து காங்கிரஸ் உறுப்பினர்கள் சட்டப்பேரவையை விட்டு வெளியேறி அரச செயலகமான கோட்டை முன் உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று மாலைவரை நிகழ்த்தினர்.

## இலவச வகுப்புக்கள்

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் கல்வி வளர்ச்சிக் கழகத்தினால் கடந்த 5-ம் திகதி தொடக்கம் நவாலி மகாவித்தியாலயத்தில் ஆண்டு 5 தொடக்கம் ஆண்டு 11வரையிலான மாணவருக்கு இலவச வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.

இவ்வகுப்புக்கள் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் மாலை 3 00 மணிமுதல் 6.00 மணிவரை நடைபெறுகின்றன. இதனால் சுமார் 300 மாணவர்கள் கல்வி பயில்வதற்குவாய்ப்பு எட்டியுள்ளது

## பணம் சேர்க்க அனுமதி இல்லை

இடம்பெயர்ந்த மாணவர்களுக்காகப் பணம்சேகரிப்பதற்கு எந்தவொரு செஞ்சிலுவைத் தொண்டருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதைப் பொது மக்களுக்கு அறியத்தரும் அதே வேளையில் அப்படியானவர்களை இனங்கண்டு அவர்களையோஅல்லது அவர்கள் பற்றிய தகவல்களையோ தமது தலைமைச் செயலகத்திற்கு அறியத் தரும்படியும் செஞ்சிலுவைச் சங்க செயலாளர் கேட்டுக் கொள்கிறார்.

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்க

**அறிவித்தல்**

சங்கத்தில் தையல், தமிழ் தட்டச்சு பயிற்சி பெற விரும்பும் மாணவிகள் அதற்குரிய விண்ணப்பப் படிவத்தினை ரூபா 25/- செலுத்தி 15-04-93 க்கு முன் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்

இல. 71 கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்.

தலைவர்
செல்லையா உருத்திரா.

(சி-6368)

ஏப்ரல் 10 முதல்

க.பொ.த சாதாரணதரம்
பகல்முழுநேரவகுப்பு

# அமை. வின்சன்ட் பெரேரா நேற்றுக்காலைமரணமானார்

(கொழும்பு)

சுற்றுப்புற சூழல் மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சரான வின்சன்ட் பெரேரா நேற்று அதிகாலை மரணமானார். கொழும்பு பெரியாஸ்பத்திரியில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருந்த அவர் நேற்று அதிகாலை மரணமானார். அவருக்கு வயது எழுபத்தைந்து. கொழும்பு மாநகரசபையின் முன்னாள் உறுப்பினராகவும், பாராளுமன்ற அங்கத்தவராகவும், கொழும்பு மாநகர மேயராகவும் அவர் முன்பு பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. பாராளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் விளங்கிய திரு. வின்சன்ட் பெரேரா பாராளுமன்றத்தில் அரசாங்கக் கட்சியின் பிரதம கொறடாவாகவும் இருந்தவர் ஆவார்.

# ஆசிரியர்கள் சம்பளம் 12-ம் திகதி வழங்கப்படும்

யாழ். மாவட்ட ஆசிரியர்களின் சம்பளம் இம்மாதம் 12 ஆம் திகதி வழங்கப்படவுள்ளதாக யாழ். கல்வித் திணைக்களம் சகல கோட்டங்களுக்கும் பொறுப்பான நிதி உதவியாளர்களுக்கும் அறிவித்துள்ளது. இத்திகதியில் சம்பளத்தை வழங்குவதற்கான கட்டுநிதியைக் கோட்டங்கள் கோரினால் உடன் கட்டுநிதி வழங்கப்படும் எனவும் யாழ். கல்வித்திணைக்களம் இவர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இதுவரை கொடுபடாமல் நிலுவையாக உள்ள ஆறு மாதச் சம்பள முற்பணக் கடன்களையும் வழங்க யாழ். கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இச்சம்பளத்தை 12 ஆம் திகதி வழங்கும்வேலையைச் செய்துமுடிப்பதற்காகச் சம்பள வேலைகளைச் செய்யும் சம்பள இலிகிதர்களுக்கு முப்பது மணித்தியால மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப் படவுள்ளதாகவும் யாழ். கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (17)

# பாடசாலை தளபாடம் துறைமுகத்தில் தேக்கம்

[வடமராட்சி]


யாழ். கல்வித் திணைக்களத்திற்கென கப்பலில் வந்த பாடசாலை தளபாடங்கள் சில பாரமேற்று எடுத்துச் செல்லாத நிலையில் கடந்த மூன்று நாட்களாக பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் கடும் வெயிலில் காணப்படுகிறது. [யோ]

# பகுதித் தலைவர்களுக்கான பயிற்சி வகுப்புகள்

[யாழ்ப்பாணம்]

இது வரையும் யாழ். கல்வித்திணைக்கள முகாமைத்துவ நிலயத்தில் நடைபெற்ற முகாமைத்துவப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ளாத பகுதித் தலைவர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சி வகுப்பு நாளை தொடக்கம் எதிர்வரும் திங்கட்கிழமை வரை தொடர்ந்து நான்கு நாட்களுக்கு நடைபெறவுள்ளன. இதுவரை பயிற்சி பெறாத பகுதித் தலைவர்களை குறித்த பயிற்சி நெறியில் கலந்துகொள்ளுமாறு யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். [பா]

# மலர்ந்த நாள் நினைவலைகள்



# தனிப்பட்ட பரீட்சார்த்திகள் முடிவு கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

1992டிசம்பரில் நடைபெற்ற க. பொ. த. (சா.த.) பரீட்சையில், யாழ். மாவட்ட தனிப்பட்ட நூற்றுக்கணக்கான பரீட்சார்த்திகளின் பரீட்சைப் பெறுபேறுகள் இன்னும் அவர்களுக்கு கிடைக்கப்பெறவில்லை என தெரியவருகின்றது.

இதனைத் தொடர்ந்து மேற்படி பரீட்சார்த்திகள் யாழ். கல்வித்திணைக்களத்திற்குச் சென்று தமது பெறுபேறுகள் இன்னமும் கிடைக்கப் பெறாமையையிட்டு கவலை தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து பரீட்சைத் திணைக்களத்தினால் இதுவரையும் அனுப்பிவைக்கப் படாத பாடசாலைப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளையும் மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளையும் தற்சமயம் கொழும்பில் தங்கியிருக்கும் யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் மிகவிரைவில் இங்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுப்பார் என தெரியவருகின்றது. (பா)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 07-04-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம் 8981

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-2737, 24-0207, 26-0536, 24-5679, 26-5576,
26-8497, 27-3927, 27-5535, 24-6489, 24-4323,
27-1027, 26-6029, 26 4726, 26-7187, 24-4664,
42-8316, 24-4854, 41-9530, 26-6331, 24-9744,
28-9927, 27-4628, 28 6996, 26-7627, 41-9997,
42-1754, 27-5039, 41-8629, 43-1857, 27-4628,
27-3946, 26-0495.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

28-6020, 27-7740, 28-1085, 24-6533, 27-4239,
41-1227, 28-0523, 24-3906, 26-5157, 42-3993,
43-1062, 24-4726, 26-6983, 26-1221, 27-1375,
28-0364, 24-5092, 71-4984.

**கல்யாணி கிறீம் ஹவுஸ் ஸ்தாபன**

**வீரு, காணி, தளபாட**

**விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்ட வீதி 93/7 ஆம் இலக்க ஒரு பரப்புக் காணியும், வீடும் யாழ்ப்பாணம். கஸ்தூரியார் வீதி, கல்யாணி கிறீம் ஹவுஸ் ஸ்தாபன தளபாடங்களுந் விற்பனைக்குண்டுவீட்டையும், தளபாடங்களையும் பார்வையிட்டு விலை நிர்ணயிக்கலாம்.

தொடர்பு:-

**கல்யாணி கிறீம் ஹவுஸ்**

(சி-6368)


## ஏப்ரல் 10 முதல்

க.பொ.த சாதாரணதரம்
பகல்முழுநேரவகுப்பு

## யூனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.

சி-(6337)


பதைப் பொது மக்களுக்கு அறியத்தரும் அதே வேளையில் அப்படியானவர்களை இனங்கண்டு அவர்களையோ அல்லது அவர்கள் பற்றிய தகவல்களையோ தமது தலைமைச் செயலகத்திற்கு அறியத் தரும்படியும் செஞ்சிலுவைச் சங்க செயலாளர் கேட்டுக் கொள்கிறார்.

இது வரையும் யாழ். கல்வித்திணைக்கள முகாமைத்துவ நிலையத்தில் நடைபெற்ற முகாமைத்துவப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ளாத பகுதித் தலைவர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சி வகுப்பு நாளை தொடக்கம் எதிர்வரும் திங் நான்கு நாட்களுக்கு நடைபெறவுள்ளன. இதுவரை பயிற்சி பெறாத பகுதித் தலைவர்களை குறித்த பயிற்சி நெறியில் கலந்துகொள்ளுமாறு யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். [பா]

## 6-ம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில்
17-9-1969

இறைவன் பணியில்
8-4-1987

### சற்குணநாதன் நந்தகோபன்

அன்புச்செல்வமே அருமை மகனே! அழகொளிரும் திங்களே! மகனே! மன்றாடி வேண்டிநின்றோம் மறந்திட்டான் காலதேவன். சென்றதே ஆண்டு ஆறு சிலிர்க்குதே எங்கள் நெஞ்சம் புன்சிரிப்பின் புகலிடமே! போன இடம் சொல்லாயோ ஆறாது ஆறாது நெஞ்சம் இது அழுதாலும் தீராது துன்பம். வேறாகி மாறாத பந்தம் எங்கள் விழிநீரே! நந்தகோபன் என்ற நாமம் மங்கியதோ! உன்மஞ்சம் மகனே மீளாத்துயில்கொண்டு ஆண்டுகள் ஆறு ஓடிமறைந்தாலும் மாறாது மறையாது ஒளிவீசும் உன் உருவம்.

உன் பிரிவால் வாடித்துடிக்கும்
அப்பா, அம்மா, அக்காமார்,
அத்தான்மார், தம்பி, தங்கை
மருமக்கள், உறவினர், நண்பர்கள்.

''பிருந்தாவனம்''
மீசாலை மேற்கு,
மீசாலை. (3387)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


## மலர்ந்த நாள் நினைவலைகள்



### கப்டன் மலரவன் [லியோ, புயற்பறவை]
[காசிலிங்கம் விஜிந்தன்]

மண்ணில் மலராய்:
08 - 04 - 1972

மண்ணில் விதையாய்:
24 - 11 - 1992

பிறந்த நாளின்று - நீ மலர்ந்த நாள்
இருபது வருடங்கள் இனிமையில் கழிந்தநாள்
இனிமையான இந்நாளின் நினைவுகளை மீட்ட
தனிமை எம் இதயங்களை வாட்ட
என்னவென்றுரைப்போம் எம் நிலையை

ஜோய் அக்காவின் கேக்கும், புஸ்பாக்காவின் பரிசுகளும்
ஆயுள் வேண்டிய அம்மம்மாவின் பிரார்த்தனையும்
அப்பப்பாவின் ஆசியுடன், பபா மாமாவின் பாசமழையில் மூழ்கி
அன்பான அம்மாவின் அன்பளிப்பாம் சேட் அணிந்து

கண்ணனாய் நீ அண்ணன்மாரின் அரவணைப்பில் நடுவிருந்து
கதைகள் பல சொல்லிக் கலகலக்க
அமைதியாய் அப்பா பார்த்தக மகிழ
இனியொரு நாள் வருமோ இப்புவியில்

கண்ணான விஜிந்தாவே -- இன்று
கண்ணே உன் புதைகுழியில்
கண்ணீரால் கோலமிட்டு
வண்ண மலர்களைத் தூவி - உன்
புன்னகையை நெஞ்சில் நிலை நிறுத்தி
எண்ணமதை அலையவிட்டு, ஏங்கியே தவிக்கிறோம்
எழுந்து நீ வாராயோ, எம் துயர் தீராயோ.

[4643]

- குரும்பத்தினர்


### ஸ்தாபன
### வீடு, காணி, தளபாட
## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்ட வீதி 93/7 ஆம் இலக்க ஒரு பரப்புக் காணியும், வீடும் யாழ்ப்பாணம். கஸ்தூரியார் வீதி, கல்யாணி கிறீம் ஹவுஸ் ஸ்தாபன தளபாடங்களும் விற்பனைக்குண்டுவீட்டையும், தளபாடங்களையும் பார்வையிட்டு விலை நிர்ணயிக்கலாம்.


தொடர்பு:-

## கல்யாணி கிறீம் ஹவுஸ்

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(4647)


## நான்காம் ஆண்டு கண்ணீர் பூக்கள்



### லெப்டினன்ட் குட்டி
மருதப்பு யோகேஸ்வரன் [கண்ணன்]

வீரஜனனம்:
23-06-1969

வீரச்சாவு:
08-04-1989

1989-ம் ஆண்டு ஊர்காவற்றுறையில் இந்திய இராணுவத்துடன் நடந்த நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்.

இளந் தமிழ் வீரனே இனத்தின் விடுதலைக்காய்
செங்குருதி சிந்தினாய்
ஈழத்தாயும் ஈரவிழி சொல்கிறாள்
ஈழமகனே நீ மரணித்தபோதிலும்
ஈழமக்கள் இதயங்களில் வாழுகிறாய்

(4646)

- தீவக மக்கள்